உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.378/2025

பெயர் :சிவக்குமார் (அ.சா.2)
தகப்பனார் பெயர் :அப்பணசாமி
கணவர் பெயர் :
வயது :41
கிராமம் :ஒத்தக்கடை
வட்டம் :மதுரை
தொழில் :மிக்சி, குக்கர், பேன் சர்வீஸ் சென்டர்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

16.03.2026

முதல் விசாரணை:

அ.சா.1 உஷாராணி என் மனைவி ஆவார். ஆஜர் எதிரியை என் மாமானார் வீட்டில் வைத்து பார்த்திருக்கிறேன். அவர் கொலைமுயற்சி செய்தார். 28.04.2021 அன்று என் மாமனார் செந்திலாதிபன் சாப்பிடுவதற்காக எங்கள் வீட்டிற்கு வருபவர் அன்றைய தினம் மதியம் சாப்பிடவரவில்லை. அதனால் என் மனைவி என் மாமனாரை தேடி என் மாமனார் வீட்டிற்கு திருமோகூர் ரோட்டில் அடகுகடை வைத்திருக்கிற இடத்திற்கு சென்றிருந்தார். மதியம் சுமார் 1.45 மணியளவில் எனக்கு போன் செய்து என் அப்பா வீட்டிற்கு வந்துவிட்டாரா என்று கேட்டார். நான் வரவில்லை என்று கூறினேன். என் மனைவி மீண்டும் எனக்கு போனில் தொடர்பு கொண்டு வீட்டின் ஜன்னல் திறந்திரப்பதாகவும், பேன், லைட் எல்லாம் ஓடிகொண்டு இருப்பதாகவும், என் அப்பாவை ஒருத்தி கொலைமுயற்சி செய்வதாகவும், உடனே என்னை வரும்படியும் அழைத்தார். நான் 2.00 மணிக்கு மாமானார் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அங்கு காவலர்களை என் மனைவி அழைத்து வந்துவிட்டார். அவரை உடனே காவலர்களள் பார்த்தவுடன் அடகுகடையில் அங்கு தான் நானும் எனது மனைவியும் இருந்தோம். என் மாமனார் அவருக்கு கண்களில் ஆசிட் ஊற்றி கண்கள் இரண்டும் பொங்கிவிட்டது. கழுத்து, வாய், தலை அரிவாளால் வெட்டிய நிலையில்

ரத்தக்காயத்துடன் இருந்தது. ஒத்தக்கடையில் உள்ள ரிஷி மருத்துவமனக்கு என் மாமனாரை அழைத்து சென்றோம். அவர்கள் பார்க்கமுடியாது என்றுகூறியதால் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு அழைத்துசென்றேன். அ.சா.1 காவல்நிலையத்திற்கு சென்றுவிட்டார். அதன்பிறகு என் மனைவியான அ.சா.1 உஷாராணி காவல்நிலையத்தில் புகார் தெரிவித்திருந்தார். இதுதொடர்பாக காவலர்கள் என்னை விசாரிக்கவே நான் நடந்தவற்றை கூறினேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.03.16 19:55:14 +0530

Assistant Sessions Judge

Melur